
# திராவிடத்தால் வாழ்கிறோம்

839

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

9




**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**

# பண்ணைகளை வயலில் இறக்கிய இயக்கம்!

கீழத்தஞ்சையில் மட்டும் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்டோர் இருந்தனர். குடந்தையில் அதன் முக்கிய முகங்களில் ஒருவராக இருந்த ஜோசப்பை லால்குடிக்கு அனுப்பினார் பெரியார். 'விளைச்சலைச் சமமாகப் பங்கிடு', 'நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கு' போன்ற முழக்கங்களை விவசாயக் கூலிகள் மனதில் ஆழமாகப் பதியச் செய்தார் ஜோசப். ஊர்வலங்கள், பிரச்சாரங்கள், துண்டறிக்கை விநியோகம் என பெரியார் கொள்கைகளும் சேர்ந்து பரப்பப்பட்டன.

பண்ணையாளர்களோடு தொடர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். கொண்டையம்பட்டி செட்டியார் பண்ணை படியாததால், அறுவடையை மொத்தமாக எடுத்துக்கொள்வது என முடிவு செய்தனர். அறுவடைக் களத்தில் திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தினருக்கும் கொண்டையம்பட்டி செட்டியார் பண்ணை ஏவிய, கொடிக்கால் விவசாயிகளுக்கும் இடையே மோதல் மூண்டது. திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 12 பேர் துடிதுடிக்க வெட்டிக் கொல்லப்பட்டனர்.

பாப்பம்மாள் பண்ணை, மணக்கால் பண்ணை, தாத்தாச்சாரியார் பண்ணையிலும் மோதல் எதிரொலித்தது. பண்ணைகள் ஒன்றுகூடி, மதுரையில் இருந்து ஆட்களை அழைத்து வந்தனர். அவர்கள் வயலில் இறங்கிய நொடியில் மோதல் வெடித்தது. மோதலில், வெளியூர் தொழிலாளர்கள் 7 பேர் இறந்தனர். அங்குள்ள வாளாடியிலும் பண்ணை ஆதிக்கம் தீவிரமாக இருந்தது. மொத்த ஊரும் பார்ப்பனர்களுடையது. அதற்கெதிராக அங்கிருந்த திராவிடர் கழகச் செயற்பாட்டாளர் கோவிந்தராஜ் இயங்கிக் கொண்டிருந்தார். அதன்விளைவாக, விவசாயத் தொழிலாளர்கள் கிடைக்காமல் நேரடியாக, பார்ப்பனர்களே வயலில் இறங்கினர். இந்திய வரலாற்றில் முதன்முதலாக பார்ப்பனர்களே வயலில் இறங்கி, வேலைபார்த்த முதல் சம்பவம் இதுதான்.



குடந்தை ஜோசப்

மோதல்போக்கின் தொடர்ச்சியாக, விவசாயிகளுக்கு 40%, பண்ணைகளுக்கு 60% என அறுவடையில் பங்கு பிரித்து, அவசரச் சட்டம் இயற்றினார் அன்றைய முதல்வர் ராஜாஜி. 1954-இல் ஆட்சிக்கு வந்த காமராசர் விவசாயிகளுக்கு 60%, நிலவுடமையாளர்களுக்கு 40% என குத்தகைதாரர் சட்டத்தை இயற்றினார். குத்தகைதாரர் சட்டம் மட்டும் போதாது என நிலங்களைப் பகிரும் வேலையை மேற்கொண்டது 'திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம்'. சமரசத் தீர்வாக அன்றைய ஆட்சியர் மலையப்பனும் இந்நடவடிக்கைகளுக்கு உடன் நின்றார். மலையப்பனைக் கண்டித்து 'இந்து' பத்திரிகை தலையங்கமே எழுதியது. 'இவரைப் போன்றவர் பதவியில் இருப்பதே ஆபத்து' என நீதிபதி கூறினார். வழக்குத் தொடுத்தவர், அரசு வழக்கறிஞர், நீதிபதி என அனைவருமே பார்ப்பனர்கள்.

அப்போது திருச்சி, காந்தி மார்க்கெட்டில் நடந்த ஒரு கூட்டத்தில், மலையப்பனுக்கு ஆதரவாக பார்ப்பனர்களைக் கண்டித்து ஆவேசமாக உரையாற்றினார் பெரியார்.

வாளாடி, உத்தமர்சீலி, கூகூர், மணக்கால் என அனைத்து ஊர்களுமே இடையாற்று மங்கலத்தில் இருந்து 3 முதல் 7 கி.மீ. தொலைவுக்குள் இருப்பவை. ஒரு பண்ணையில் விழுந்த சிறு கீறல், மற்ற பண்ணைகளிலும் விரிசலை ஏற்படுத்தின. அந்த விரிசலைப் பெரும் பிளவாக்கி, பண்ணை ஆதிக்கத்தோடு, ஜாதிய கட்டமைப்பையும் தகர்த்தது திராவிட விவசாயத் தொழிலாளர் சங்கம். இன்றும் அங்கு எல்லா சமூகங்களும் நிலம் வைத்திருக்கின்றன. அதற்கான வலுவான அடையாளமாக இன்றும் திகழ்கிறது இடையாற்றுமங்கலம்.

**...பயணிப்போம்.**

## அரசுப் பள்ளி மாணவர்களும் ஆரிய ஆராய்ச்சியும்...

செஞ்சி பகுதியில் உள்ள 9 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் +2 பொதுத் தேர்வில் 100% தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். அந்த மாணவர்கள் மற்றும் பள்ளிகளுக்குப் பாராட்டுக்கள் குவிந்தன. ஆனால், "செஞ்சி அரசுப் பெண்கள் பள்ளியில் வேதியியல் தேர்வெழுதிய 167 மாணவர்கள் 100/100 மதிப்பெண்கள் பெற்றுள்ளதும், நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் 99 மதிப்பெண்கள் பெற்றுள்ளதும் வியப்போடு அதிர்ச்சியை அளிக்கிறது" என அறிக்கை வெளியிட்டுள்ளார் பா.ஜ.க.-வின் மாநிலத் துணைத் தலைவரான நாராயணன் திருப்பதி.

"தேர்வுக்கு முன்னரே கேள்வித்தாள்களை மாணவர்களிடம் அளித்திருந்தால்கூட 167 மாணவர்கள் நூறு மதிப்பெண்கள் பெறுவதற்கான வாய்ப்பே இல்லை. விடைகளை முன்னரே தயார் செய்து மாணவர்களிடத்தில் கொடுத்து விட்டனரா? அல்லது விடைத்தாள்களே மாற்றி வைக்கப்பட்டனவா?" என்று வாய்க்கு வந்தபடி வசை பாடியிருக்கிறார்.

பிற்படுத்தப்பட்ட–தாழ்த்தப்பட்ட மாணவர்களின் தகுதி– திறமை குறித்து காலம்காலமாக வைக்கப்படும் பார்ப்பனிய மனநிலை விமர்சனங்கள்தான் இவை. நாராயணன் திருப்பதி குற்றச்சாட்டில் கடுகளவும் உண்மை இல்லை என்பதை கல்வி அதிகாரிகள் விளக்கிவிட்டனர்.

ஒன்றிய அரசின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஓ.பி.சி. 27%, எஸ்.சி. பிரிவினருக்கு 15%, எஸ்.டி. பிரிவினருக்கு 7.5% இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற விதிகளைப் புறந்தள்ளி, ஐ.ஐ.டி. மற்றும் ஐ.ஐ.எம்.மில் 80% ஆசிரியப் பணியிடங்கள் முன்னேறிய சமூகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என ஆர்.டி.ஐ. தகவல்கள் அம்பலப்படுத்தின. இது எப்படி சாத்தியம் என்று நாராயணன் திருப்பதி கேட்கவில்லை.

மருத்துவ உயர் படிப்புக்குக் கல்விக் கட்டணமாக ரூ.25 லட்சம் முதல் ரூ.90 லட்சம் வரை நிர்ணயிக்கப்பட்டுள்ள சில தனியார் கல்லூரிகளில், EWS ஒதுக்கீட்டில், கடந்த ஆண்டு 143 பேர் சேர்ந்துள்ளனர். போலிச் சான்றிதழ் பெற்று, 10% இடஒதுக்கீட்டை மோசடியாக இவர்கள் பெற்றார்களா என்று நாராயணன் திருப்பதி அப்போதும் கேட்கவில்லை. ஆனால், இப்போது ஏழை மாணவர்களின் மதிப்பெண்களை ஆரிய ஆராய்ச்சி செய்கிறார். அரசுப்பள்ளி மாணவர்களைப் பற்றிய பா.ஜ.க.-வின் மோசமான மனநிலைதான் இது என்று கண்டனங்கள் வலுத்து வருகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



த.சுப்பிரமணியன்



### ஒன்றிய அரசு ஆசிரியர்களுக்கு நிகரான ஊதியம்!

சென்னை, ஏ.வி.எம். இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில், 20.07.97 அன்று தமிழ்நாடு பட்டதாரி – முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் வெள்ளி விழா – மாநில மாநாடு, நடைபெற்றது. எங்களது அழைப்பை ஏற்று, அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்திருந்தார். கோரிக்கை மாநாடாக நடைபெற்ற இம்மாநாட்டில் ஒன்றிய அரசின் ஆசிரியர்களுக்கு இணையாக எங்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை அவரிடம் அளித்தோம். அதற்கென உடனடியாக ஆணையம் அமைத்து, 6 மாத காலத்திற்குள் ஊதிய உயர்வை வழங்கினார். இம்மாநாட்டில் சங்கத்தின் பொதுச்செயலாளராக அவருடன் எடுத்துக்கொண்ட புகைப்படம், உடன் அன்றைய சங்கத் தலைவர் அ.மயில்சாமி மற்றும் பொருளாளர் அ.மாயவன் ஆகியோர் இருக்கின்றனர்.

**– த.சுப்பிரமணியன், சிறப்புத் தலைவர், தமிழ்நாடு பட்டதாரி– முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் சங்கம்**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

61

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."**




# பொள்ளாச்சிக் குற்றவாளிகளைக் காப்பாற்றிய அ.தி.மு.க. - பா.ஜ.க.!

***அண்ணா பல்கலைக்கழக மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றவாளி விவகாரத்தில் 'யார் அந்த சார்?' என்று தி.மு.க. அரசை நோக்கிக் கேட்ட அ.தி.மு.க.வினரும் சாட்டையால் அடித்துக் கொண்ட பா.ஜ.க. அண்ணாமலையும் பொள்ளாச்சி பாலியல் வழக்கின் குற்றவாளிகளுக்கு சாகும் வரை ஆயுள்தண்டனை தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதைப் பற்றி என்ன சொல்வார்கள்?***

பாலியல் சீண்டல்களும், அவற்றை வீடியோ எடுப்பதற்காகவே 'வார் ரூம்'களும் கொண்ட கட்சியாக பா.ஜ.க.வை வைத்திருந்தவர் அண்ணாமலை. அவர் அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்திற்காக, மென்பஞ்சு சாட்டையால் அடித்துக்கொண்ட அரசியல் நாடகம் எடுபடவில்லை.

தி.மு.க. அரசு உடனடியாக இந்த வழக்கில் கவனம் செலுத்தி, அறிவியல்பூர்வமான ஆதாரங்களைத் திரட்டி, அதன் அடிப்படையில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, நீதிமன்றத்தின் பாராட்டையும் பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட நபரின் செல்போன் அந்த நேரத்தில், ஃப்ளைட் மோடில் இருந்ததும் சிக்னல் இல்லாத போனில் யாரிடமோ பேசுவது போல பாசாங்கு செய்திருக்கிறார் என்பதும் குற்றப்பத்திரிகையில் தெளிவாக இடம்பெற்றுள்ளன. இதன்பிறகும் 'யார் அந்த சார்?' என்று கேட்ட எடப்பாடி பழனிசாமி சாரும், அவரது கட்சியைச் சார்ந்த ஏராளமான சார்களும், தங்கள் ஆட்சிக்காலத்தில் பொள்ளாச்சி பாலியல் குற்றவாளிகளைக் காப்பாற்றுவதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள்.

> **"பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் புகார் அளித்தும், 10 நாட்கள் கழித்துத்தான் எஃப்.ஐ.ஆர். போடப்பட்டது."**

இளம்பெண்கள், "அண்ணா அடிக்காதீங் கண்ணா.. விட்டுடுங்கண்ணா" என்று கதறியும் அவர்களைப் பாலியல் கொடுமைக்குள்ளாகி அதை வீடியோ எடுத்த கொடூரக் காமுகர்கள் கூட்டத்தில், அ.தி.மு.க. பொறுப்பாளர்களும் உண்டு. இந்த மொத்தக் கூட்டத்திற்கும் அன்றைய அ.தி.மு.க அமைச்சர்கள், அ.தி.மு.க. பிரமுகர்களின் ஆதரவும் உண்டு. பாலியல் வன்கொடுமைக் குற்றவாளிகளைக் கைது செய்யவேண்டும் எனப் போராடிய பொள்ளாச்சி தி.மு.க. நிர்வாகிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், மகளிர் அமைப்பினர் ஆகியோரை அன்றைய அ.தி.மு.க. அரசு கைது செய்தது. பா.ஜ.க. இந்தப் பாலியல் குற்றத்தை எதிர்த்து, எந்த ஒரு போராட்டத்தையும் நடத்தவில்லை. மாவட்டக் காவல்துறை, சி.பி.சி.ஐ.டி. ஆகியவற்றின் மூலம் உண்மைக் குற்றவாளிகளையும் அவர்களுக்குத் துணை நின்றவர்களையும் தப்ப வைக்கும் முயற்சியே அ.தி.மு.க. தரப்பில் நடைபெற்றது. அதனுடன் பா.ஜ.க. கூட்டணி சேர்ந்தது. பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் புகார் அளித்தும், 10 நாட்கள் கழித்துத்தான் எஃப்.ஐ.ஆர். போடப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் தொடர்ச்சியான போராட்டத்தினால் பொள்ளாச்சி பாலியல் வழக்கு சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்ட பிறகே, பாதிக்கப்பட்ட பெண்களின் வாக்கு மூலம் பெறப்பட்டு, வழக்கு விசாரணை நடைபெற்று, அ.தி.மு.க. முன்னாள் நிர்வாகி உள்ளிட்ட குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை தீர்ப்பு கிடைத்துள்ளது.

## நல்லுருக

### நீதிக்கட்சி வரவேற்பு!

20-4-67 அன்று சென்னை, பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவைக்கு நீதிக்கட்சியின் சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழவேள் பி.டி.இராசன் அனைவரையும் வரவேற்றார். அண்ணா அவர்கள் பேசும்போது "என்னைப் பொறுத்தவரை, நீதிக்கட்சியிடமிருந்து ஆற்றலான பெருந்தன்மைப் போக்கினையும், சுயமரியாதை இயக்கத்திலிருந்து தன்மான உணர்வையும், காங்கிரசுக் கட்சியின் பெருந்தலைவர்களிடமிருந்து அரசியல் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றலையும் கற்றுள்ளதால், மூன்று வேறுபட்ட முழு உணர்ச்சியின் பிரதிநிதியாக நான் செயல்படுவேன்"என்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131